செ.வெ.எண்:10/டிசம்பர் நாள்:06.01.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## கீழக்கரை, ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 187 மாணவிகளுக்கு ரூ.27.45 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகளை

## மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையில் உள்ள ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 187 மாணவிகளுக்கு ரூ.27.45 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகளை மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் இன்று (06.01.2016) வழங்கினார்.இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா அவர்கள் முன்னிலை வகித்தார்.

இவ்விழாவில் மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், மாணவ, மாணவியர்களின் கல்வி வளர்ச்சியே நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படை என்பதை உணர்ந்து, கல்வித்துறையில் அதிக அளவில் நிதிஒதுக்கீடு செய்து தொடர்ந்து பல்வேறு கல்வி மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில் கல்வித்துறையில் மட்டும் மொத்தம் ரூ.85,400 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு கல்வி வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2015-2016-ஆம் நிதியாண்டில் கல்வித்துறைக்கு மட்டும் 21 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாணவ, மாணவியர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாணவ, மாணவியர்கள் மேலை நாடுகளுக்கு இணையான உலக தரம் வாய்ந்த கல்வியினை பெற்றிட வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இன்றைய தினம் ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 187 மாணவிகளுக்கு ரூ.27.45 இலட்சம் மதிப்பில் விலையில்லா மடிக்கணினிகள் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் மட்டுமல்லாது, சிரமமின்றி பள்ளிக்குச் சென்று வர விலையில்லா மிதிவண்டிகள், கல்வி ஊக்கத்தொகை, இலவச பேருந்துப் பயண அட்டைகள், சீருடை, நோட்டு புத்தகங்கள் உள்ளிட்ட 14 வகையான மாணவர் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதன் மூலம் மாணவ, மாணவியர்களின் கல்வி கற்கும் ஆர்வம் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஆண், பெண் என இருபாலரும் உயர்கல்வி பெற ஏதுவாக 3 அரசு கலைக்கல்லூரிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். தமிழக அரசு செயல்படுத்தி வரும் இதுபோன்ற கல்வி வளர்ச்சி திட்டங்களின் காரணமாக 2015-ஆம் ஆண்டில் நடைபெற்ற 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில், மாணவர்களின் தேர்ச்சி மாநில அளவில் 13-ஆவது இடத்திலிருந்து 8-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. மேலும் எதிர்வரும் 2016-ஆம் ஆண்டு பொதுத்தேர்விலும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் மேலும் அதிகரித்து மாநில அளவில் முதல் மூன்று இடங்களுக்குள் முன்னேறுவதற்கு மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடுமையாக உழைத்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில், ஹமீதியா கல்வி நிர்வாக இணை செயலாளர் திரு.அப்துல் மாலிக், முதுகுளத்தூர் கூட்டுறவு நிலவள வங்கித் தலைவர் திரு.இரா.தர்மர், கீழக்கரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ராஜேந்திரன், கீழக்கரை நகர்மன்ற துணைத்தலைவர் திரு.காஜாமுகைதீன், ஹமீதியா பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் தாளாளர் திரு.ஹமீத் அப்துல்காதர், தலைமை ஆசிரியை திருமதி.நல்லம்மாள், நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஜன்னத்துள் பிர்தவுஸ் உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**